DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | மகேந்திரன் |
| Father's Name | சின்னப்பிள்ளை |
| Village | வாணியம்பாடி |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | பத்திர எழுத்தர் |
| Age | 55 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **10.07.2025**

**O.S. No. 100/2003 வா.சா.1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

1. வழக்கு சொத்து குறித்து ஜேம்ஸ் செல்வதாஸ் என்பவர் எழுதி வைத்துள்ள உயில் ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் அதுபோன்ற உயில் எதுவும் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் 19.09.1984 தேதியிட்ட உயில் ஆவணமானது மேற்படி ஜேம்ஸ் செல்வதாஸ் எழுதிவைத்த உயில் ஆவணமா என்றால் இல்லை.

2. மேற்படி ஜேம்ஸ் செல்வதாஸ் எழுதிவைத்த உயில் ஆவணத்தில் பள்ளி நிர்வாகம் ஜேம்ஸ் செல்வதாஸ் என்பவரின் குடும்பத்தினருக்கு தான் சென்றடைய வேண்டும் என்று எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. 27.03.2002ம் தேதியில் பிரதிவாதி ஒரு கூடுதல் Trust ஆவணம் பள்ளி

நிர்வாகம் தொடர்பாக எழுதிவைத்துள்ளார் என்றால் ஆவணத்தை பார்த்தால் தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் மேற்படி பிரதிவாதி நல்லப்பா நிர்வாகத்தில் இருந்து நீக்கப்பட்ட பிறகு தனிப்பட்ட முறையில் ஏற்படுத்திக்கொண்ட Trust ஆவணம் ஆகும்.

3. 01.12.1988–ல் தான் Trust சம்மந்தமான முதல் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் தேதி ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது மேற்குறிப்பிட்ட ஆவணம் தான் என்றால் சரிதான். **(மேற்படி 1988–ம் ஆண்டு பத்திர எண்.361 Trust Deed ஆவணம் பி.வா.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. நான் ஏற்கனவே இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.63/2013 கல்வித்துறைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தேனா என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்பை அடிப்டையாக கொண்டு Contempt EP.No.45/2014 தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் நிறைவேற்று மனு தாக்கல் செய்தது நினைவிருக்கிறது, நிறைவேற்று மனு தள்ளுபடியானதா என்று தெரியவில்லை. மேற்படி நிறைவேற்று மனு தற்போதைய நிலை என்னவென்றாலும் எந்த தேதியில் வாய்தா வருகிறது என்றாலும் நினைவில்லை.

5. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி நிறைவேற்றுமனு 28.08.2017–லேயே தீர விசாரிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டதற்கான தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை என்றால் சரிதான். **(மேற்படி ஆவணம்**

**பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நான் ஒரு தனிப்பட்ட நபரான நல்லப்பன் பெயரில் தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது தவறு. நான் இவ்வழக்கினை தாக்கல் செய்வதற்கு Trust–ல் இருந்து ஏதேனும் அனுமதி பெற்றேனா என்றால் நிர்வாகத்தின் முடிவின் அடிப்படையில் தான் இவ்வழக்கு தொடரப்பட்டுள்ளது.

6. நிர்வாகத்தின் முடிவு ஏதேனும் இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஒரு தனிப்பட்ட நபராக தனி நபரின் பெயரில் இவ்வழக்கினை தொடுத்து ஒரு Trust நிர்வாகத்தை முடக்கும் வகையில் செயல்படுகிறேன் என்றால் சரியல்ல.

7. இந்த Trust நிர்வாகம் குறித்து ஆசிரியர் சரவணன் என்பவர் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், தற்போது சாட்சி மாற்றி அது Trust நிர்வாகம் கிடையாது, அது அவர் ஊதிய சம்மந்தமாக கல்வித்துறைக்கு எதிராக ரிட் மனு தாக்கல் செய்திருந்தார்.

8. என்னிடம் காட்டப்படும் ஆவணமான 05.07.2015–ல் பிரதிவாதி எனக்கும் சரவணனுக்கும் மற்றும் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் அனுப்பிய நோட்டீஸ் என்றால் இதுபோன்று நோட்டீஸ் எனக்கு வந்ததாக நினைவில்லை.

9. புதிதாக உருவாக்கப்பட்ட Trust–ன் நிர்வாகிகள் யார் யார் என்றால் ஏற்கனவே இதற்கு பதிலளித்துள்ளேன். மேற்படி புதிதாக உருவாக்கப்பட்ட

Trust–ன் நிர்வாகிகள் பெயரிலான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யாததற்கு காரணம் என்னவென்றால் ஏற்கனவே பதிலளித்துவிட்டேன். 12.08.2005–ல் உதவி தொடக்க கல்வி அலுவலர் இவ்வழக்கு பள்ளி சார்ந்து ஒரு உத்தரவு பிறப்பித்திருந்தார் என்றால் எனக்கு நினைவில்லை.

10. இந்த பள்ளி நிர்வாகம் சிறுபான்மையினருக்கான உரிமையின் அடிப்படையில் தொடங்கப்பட்டதா என்றால் ஏற்னவே பதிலளித்துவிட்டேன். தற்போது புதிய Trust நிர்வாகத்தில் இருப்பவர்கள் அனைவரும் சிறுபான்மையினர்களா என்றால் இல்லை, ஏன் என்றால் இது சிறுபான்மையினர்களுக்கான பள்ளி இல்லை என்பதால் அவ்வாறு இல்லை.

11. மேற்படி பள்ளி நிர்வாகம் சிறுபான்மையினருக்கான நிர்வாகமாக இருந்து எப்போது மாற்றம் செய்யப்பட்டது என்றால் இது எப்போதுமே சிறுபான்மையினருக்கான பள்ளியாக இருந்தது இல்லை. பள்ளி நிர்வாகத்திற்கு அரசு மாணியம் வருகிறதா என்றால் ஆம், வருகிறது. மேற்படி மாணியம் எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது என்றால் Non – Minority அடிப்படையில் வழங்கப்படுகிறது.

12. நான் உதவி கல்வி அலுவலர் சித்ரா என்பவருக்கு எதிராக மாநில மனித உரிமை ஆணையத்தில் வழக்கு எண். 6867/2014 தொடுத்து இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவினை நான் தனிநபராகவா அல்லது பள்ளியின் செயலாளர் என்ற அடிப்படையில் தொடுத்து இருந்தேனா என்றால் பள்ளியின் செயலாளர் என்ற அடிப்படையில் தொடுத்தேன்.

13. மேற்படி மனுவிற்கு எதிராக நீதிப்பேராணை மனு எண்.11703/2018 தாக்கலாகி மேற்படி நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான், 2 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது மட்டும் தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது பள்ளிக்கு நேரடி மாணியம் வழங்கப்படுகிறதா என்றால் இல்லை, நான் பள்ளியின் செயலாளர் என்ற முறையில் நிர்வாகத்திடம் இருந்தே மாணியம் வழங்கப்படுகிறது.

14. இப்பள்ளிக்கு அரசாங்கத்திடம் இருந்து Trust வங்கிக்கணக்கிற்கோ அல்லது பள்ளியில் வங்கி கணக்கிற்கோ மாணியம் வருகிறதா என்றால் இல்லை. Sub Treasury மூலமாக மேற்படி பள்ளிக்கு ஆசியரியர் சம்பளம் வருகிறது, தொகை நினைவில்லை.

15. மேற்படி பள்ளியில் தற்போது தேதியில் எத்தனை ஆசிரியர்கள் பணிப்புரிகிறார்கள் என்றால் Deputation–ல் ஒரேயொரு ஆசிரியர் பணிப்புரிகிறார். மேற்படி Deputation–ல் பணிப்புரியும் ஆசிரியர் எங்கிருந்து வருகிறார் என்றால் T.V.K.V–பள்ளியில் இருந்து திரு.வி.க. பள்ளியில் கல்வித்துறை உத்தரவின் மூலம் பணிப்புரிகிறார்.

16. நான் வா.சா.ஆ.6 முதல் 9 வரையிலான ஆவணங்கள் நகல் ஆவணமாக தாக்கல் செய்யப்படுவதற்கான காரணம் என்னவென்றால் நேரில் பார்த்து தான் கூற முடியும்.

17. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் போர்ஜரியாக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5–யை சார்ந்த தற்போதைய Trust–ன் தலைவர் யார் என்றால் விஜயன், பொருளாளர் சரண் குமார்.

18. மேற்படி விஜயன் மற்றும் சரண் குமார் எனக்கு என்ன உறவு முறை என்றால் ஏற்கனவே பதில் கூறிவிட்டேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணத்தில் மேரி ஜேம்ஸ் மெமோரியல் டிரஸ்ட் பதிவு எண்.361/88 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பதிவெண் யாரால் வழுங்கப்பட்டது என்றால் பதிவுத்துறையால் வழங்கப்பட்டது. மேற்படி பதிவெண் சம்மந்தமான பதிவு ஆவணம் யாரிடம் உள்ளது என்றாலும் இவ்வழக்கில் ஏன் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஏற்கனவே பதில் கூறிவிட்டேன்.

19. Trust சார்ந்த பெயரே குறிப்பிடாமல் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் மேற்குறிப்பிட்ட Trust–ன் மூல ஆவணத்தின் அடிப்படையில் குடும்பத்தினர் மட்டும் தான் நிர்வாகிகளாக இருக்க முடியும் என்றாலும் தனிப்பட்ட முறையில் நான் செயலாளராக இருக்க முடியாது என்றால் சரியல்ல, ஏனென்றால் குடும்பத்தினர் தான் நிர்வாகிகளாக இருக்க வேண்டும் என்று Trust ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை. நான் அடிப்படை முகாந்திரத்திற்கு விரோதமாக Supplementary–ஆக ஒரு Trust Deed–யை தயார் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதியை நான் நீக்கியதாக கூறுவது சட்டத்திற்கு புறம்பானது என்றாலும் நடைமுறைக்கு வரவில்லை

என்றாலும் சரியல்ல. அதனால் தான் நீக்கியதாக கூறப்படும் உத்தரவையோ அல்லது அதை சார்வு செய்யப்பட்டதற்கான எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| *ESHWAR VISWANATHAN* | *DISTRICT MUNSIF* *Digitally signed by ESHWAR VISWANATHAN* *Date: 2025.07.31 17:23:05 +0530* |

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வாணியம்பாடி.**